# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 04.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ.்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP-977/SCIC/2022**

திரு அ. ஜெயமணி — புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துறை உதவித் தலைவர் (பணியமைப்பு)
காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.

--- பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்
காவல் ஆணையாளர் அலுவலகம்
(தலைமையிடம்)
வேப்பேரி,
சென்னை.

**ஆணை**

இவ்வழக்கில் 04.02.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ் கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது:

> *" 4. **ஆவணங்களைப் பரிசீலிக்கையில் மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லையென்று தெரியவருகிறது. மனுதாரரின்** 31.12.2021 **தேதியிட்ட மனுவானது நான்கு மாதங்கள் கடந்தப் பின் பிரிவு** 6(3)**ன் கீழ்** 01.04.2022 **தேதியிட்ட***

*கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவினை உரிய நேரத்தில் மாற்றம் செய்ய தவறியதற்காக 31.12.2021 அன்று பணியாற்றிய பொதுத் தகவல் அலுவலர் திரு R. வேதரத்தினம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்தபோது அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாக விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவித்ததன் அடிப்படையில் காரணம் கேட்புக் குறிப்பாணையானது கைவிடப்படுகிறது.*

*5. மனுதாரரின் 31.12.2021 தேதியிட்ட மனுவானது பிரிவு 6(3)ன் கீழ் 01.04.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்கப்படாததால் அப்போது பணியிலிருந்த பொதுத் தகவல் அலுவலர் Thiru L. Balaji Saravanan, Public Information Officer/Deputy Commissioner of Police (Head Quarters), Chennai (Now Superintendent of Police, Civil Supplies CID. West Zone, Coimbatore அவர்கள் மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை அவர் இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் அதாவது 12.03.2025குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பணிக்கப்படுகிறார்.*

*6. பொதுத் தகவல் அலுவலர், காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்கள் மேற்குறிப்பிட்டவாறு முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், வேப்பேரி, சென்னை அவர்கள் ஆணையத்திற்கு தனது விளக்கத்தினை 12.03.2025க்குள் சமர்பிப்பதை உறுதி செய்ய வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.".*

2. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர், காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்கள் ஆணையம் உத்தரவிட்டவாறு திரு Thiru L. Balaji Saravanan, (முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்)/Deputy Commissioner of Police (Head Quarters), Chennai (Now Superintendent of Police, Civil Supplies CID. West Zone, Coimbatore அவர்களிடமிருந்து விளக்கத்தினை பெற்று ஆணையத்திற்கு 12.03.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக சமர்பித்துள்ளார்.

3. திரு Thiru L. Balaji Saravanan, (முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்)/Deputy Commissioner of Police (Head Quarters), Chennai (Now Superintendent of Police, Civil Supplies CID. West Zone, Coimbatore அவர்களின் விளக்கம் ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டு, அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மேல்நடவடிக்கை ஏதுமின்றி வழக்கானது முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்-CP-977/SCIC/2022</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துறை உதவித் தலைவர் (பணியமைப்பு)
காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம்,
மயிலாப்பூர்,
**சென்னை** 600 004.

பொதுத் தகவல் அலுவலர்
காவல் ஆணையாளர் அலுவலகம்
(தலைமையிடம்)
வேப்பேரி, சென்னை.

Thiru L. Balaji Sarvanan
(முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்)
Superintendent of Police,
Civil Supplies, CID,
West Zone, Coimbatore.

**Copy to:**
Director General of Police
Office of the DGP
Mylapore,
Chennai.

Registrar
Tamil Nadu Information Commission
Chennai.

**<u>மனுதாரர்:-</u>**

திரு அ. ஜெயமணி
பிளாட் எண்.6, கே.வி.ஹோம்,
கதவு எண்.எஃப் 3, பார்டர் தெரு,
தேவி நகர்,
திருமுல்லைவாயில்
**சென்னை** 600 062.

JJ/PS